1969 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எந்த மொழிப் படத் தயாரிப்பாளர்களாக இருந்தாலும் ஸ்டுடியோவுக்குக் கட்டணத்தைச் செலுத்தித்தான் படத்தை எடுக்கிறார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா: கிராமப்புறங்களில் மக்கள் வசதியாக சினிமா பார்ப்பதற்கு கிராமப்புற திரைப்பட அரங்குகளைத் திறக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கேள்வி, ஸ்டுடியோக்களைப் பற்றியது.

Grievances Counter in Government offices

* 72 Q.—THIRU K. VINAYAKAM:
THIRU N. S. V. CHITHAN: } Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government proposes to instruct all Government offices to open "grievances counter"; and

(b) if so, the object thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) பொதுத் (பணி) துறையின் 29—7—1968 தேதியிட்ட 1580 எண் அரசாங்க ஆணையில், பொது மக்களுடன் தொடர்பு உள்ள அலுவலகங்களில் தகவல் அறை ஒன்றினை அமைக்கவேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.

(இ) அரசாங்க அலுவலகங்களில் இடைத் தரகர்களை நீக்குவதும் பொதுமக்களுக்கு வசதி செய்து கொடுப்பதும் இதன் நோக்கமாகும்.

திரு. கே. விநாயகம்: அப்பேர்ப்பட்ட நோக்கம் நம்முடைய சர்க்காருக்கு இருந்தால் இதுவரையில் எந்தெந்த அலுவலகத்திலே இந்தத் தகவல் அறியும் கவுன்டரைத் திறந்து இருக்கிறார்கள்? அங்கு எவ்வளவு பேர் வந்து குறைபாடுகளைச் சொல்லியிருக்கிறார்கள்? அப்படித் தெரிவித்த குறைகளைப் பற்றி அலுவலகமோ சர்க்காரோ நடவடிக்கை எடுத்து தீர்த்து வைக்க முயற்சி எடுக்கப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தத் திட்டம் இப்போது தான் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு விவரங்களைத் தர இயலாத நிலையில் இருக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அரசாங்க அலுவலகங்களுக்குக் குறைகளை எழுதினாலும், புகாரை எழுதி அனுப்பினாலும் சரியான பதில் பல மாத காலத்திற்கு வருவதில்லை. இத்தனை காலத்திற்குள் பதில் அனுப்ப வேண்டும். இவ்வளவு நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற முறையை அரசாங்கம் ஏற்படுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உரிய காலத்தில் காரியங்கள் நடைபெற வேண்டுமென்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட திட்டங்களில் இதுவும் ஒன்று. உறுப்பினர் கூறிய குறைபாடுகளைக் களைவதற்குத் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சில மாதங்களுக்கு முன்பு 'பப்ளிக் க்ரீவன்ஸஸ் டே' என்ற ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு அறிஞர் அண்ணா அவர்கள் வந்து துவக்கி வைத்தார்கள். அதிலே பல யோசனைகளை சட்ட மன்ற உறுப்பினர்களும், வந்திருந்த உயர்தர அதிகாரிகளும் கூறியிருக்கிறார்கள். அங்கு கூறப்பட்ட யோசனைகளை மேற்கொண்டு கிரீவன்ஸஸைப் போக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா ? அதை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு எந்த இலாகாவுக்கு அந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த யோசனைகளையெல்லாம் புதிய அமைச்சரவையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நான் படித்துப் பார்த்து எந்த வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றி ஆராய்வேன்.

மன்னார்குடியில் தியணைக்கும் பணியாளர்களுக்கு வீட்டு வசதி.

*73 வினா—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி நகரத்திலுள்ள தீ அணைப்பு நிலையத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் தங்குவதற்கும், வண்டிகள், மற்ற சாதனங்களை ஒழுங்குடன் பாதுகாத்து வைப்பதற்கும் முறையான கட்டட வசதி செய்ய உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மன்னார்குடி தீயணைப்பு நிலையப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு கட்டி கொடுக்கும் செயற்குறிப்பு எதுவுமில்லை.

மன்னார்குடி தீ அணைப்பு நிலையத்தில் வண்டியை விட்டு வைப்பதற்காக உள்ள இரண்டு இடங்களின் மேற் கூரை, ஓலை வேயப்பட்டதாகும். வண்டிகளையும் மற்ற சாதனங்களையும் ஒழுங்காகப் பாதுகாக்க, இந்த ஓலைக் கூரைக்குப் பதிலாக ரூ. 9,500 செலவில் வலுவேற்றிய கற்கலவைக் கூரை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியை 1968-69-ற்கான கட்டிடப் பணித் திட்டத்தில் தியணைப்புப் படை இயக்குனர் சேர்ந்துள்ளார்.

விளம்பரத் துறையைச் சேர்ந்த பிரசார வண்டிகள்

* 79 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளம்பர இலாகாவில் மாவட்டவாரியாக இருந்த பிரசார வண்டிகளைப் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?